14 செப்டம்பர் நடப்பு நிகழ்வுகள்

| | |
|---|---|
| தமிழ்நாடு கோவில்களில் 3 பெண் துணை அர்ச்சகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் | செய்தி<br><br>முதன்முறையாக தமிழக கோயில்களில் 3 பெண்கள் துணை அர்ச்சகர்களாக.நியமிக்கப்பட்டுள்ளனர்<br><br>முக்கிய குறிப்புகள்<br><br>• பாஞ்சராத்ர ஆகமத்தை' பின்பற்றி ஸ்ரீ வைஷ்ணவ கோவில்களில் எஸ்.கிருஷ்ணவேணி, எஸ்.ரம்யா மற்றும் ரஞ்சிதா ஆகியோர் துணை அர்ச்சகர்களாக பதவியேற்கவுள்ளனர்.<br>• இம்மூன்று பெண்கள்தான் முதன் முதலாக ஸ்ரீரங்கத்தில் இருக்கும் ஸ்ரீ ரங்கநாதர் கோயிலில் உள்ள அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் பயின்றனர் . |

| | |
|---|---|
| தமிழக **-** கேரள எல்லைப் பகுதிகளில் **24 X7** மணி நேரமும் சுகாதார பரிசோதனை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன **.** | செய்தி:<br><br>• தமிழக - கேரள எல்லைப் பகுதிகளில் 24 மணி நேரமும் சுகாதார பரிசோதனை முகாம்களை தமிழக அரசு அமைக்க உள்ளது<br><br>• அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட காய்ச்சல் உடைய நோயாளிகளின் விவரங்களை ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டத்தின் (IDSP) இணையதளத்தில் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>முக்கிய குறிப்புகள்<br><br>• அண்டை மாநிலமான கேரளாவில் நிபா வைரஸ் ஆல் நோயாளிகள் இறந்துள்ளதை உறுதி செய்த பின்னர் கோயம்புத்தூர், தென்காசி மற்றும் கன்னியாகுமரி உள்ளிட்ட ஆறு மாவட்டங்களில் உள்ள எல்லை சோதனைச் சாவடிகளில் கேரளாவிலிருந்து தமிழக மாநிலத்தில் நுழைந்தவர்களை சுகாதாரத் துறை சோதனை செய்யத் தொடங்கியுள்ளனர் .<br><br>• காய்ச்சல் அறிகுறி உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும்.<br><br>• கூடலூருக்குச் சென்ற சுகாதார அமைச்சர் மா. சுப்பிரமணியம் கூடலூரில் அமைந்துள்ள தாலுகா மருத்துவமனை வளாகத்தில் 200 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார். |

| | |
|---|---|
| ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம் **(IDSP)** | ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம் **(IDSP):**<br>• ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டம் (IDSP) என்பது இந்தியாவில் மாநில மற்றும் மத்திய அரசுகளை உள்ளடக்கிய ஒரு நாடு தழுவிய நோய் கண்காணிப்பு திட்டம் ஆகும் . இதன் நோக்கம் நோய்களை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் நோய் உள்ளவரை நீண்டகாலம் கண்காணிப்பது ஆகும்.<br>• உலக வங்கியின் உதவியுடன் 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.<br>• இந்தியாவின் அனைத்து மாநிலங்களும், ஒன்றிய பிரதேசங்களும் மற்றும் மாவட்ட தலைமையகங்களும் கண்காணிப்பு பிரிவுகளை அமைத்துள்ளன.<br>• டிஜிட்டல் கண்காணிப்பு திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த சுகாதார தகவல் இணைய தளத்தை (IHIP) நவம்பர் 2019 ஆம் ஆண்டில் பல மாநிலங்களில் தொடங்கப்பட்டது. |

To get free Live Classes, Materials Scan this QR Code & Download our Adda247 App

## புகையிலை இல்லாத கிராமம்




செய்தி:

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திருப்பனி செட்டிகுளம் கிராம பஞ்சாயத்து "புகையிலை இல்லாததாக கிராமமாக" அறிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய குறிப்புகள்:

- தூத்துக்குடியில் ஏரல் தாலுகாவில் உள்ள திருப்பணி செட்டிகுளம் கிராம பஞ்சாயத்து சிறப்பு கிராம சபை கூட்டத்தில் திருப்பணி செட்டிகுளம் கிராமத்தை புகையிலை இல்லாத கிராமமாக அறிவிக்கப்பட்டது..
- 1,200 மக்கள்தொகை கொண்ட திருப்பனி செட்டிகுளம் கிராமத்தில் புகையிலைப் பொருட்களை விற்காத மூன்று கடைகள் உள்ளன மேலும் இந்த கிராமத்தில் டாஸ்மாக் மதுபான கடைகளும் இல்லை
- சிகரெட்டுகள், பீடிகள், புகையில்லா புகையிலை மற்றும் மின்னணு சிகரெட்டுகள் போன்ற புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்துவதை தடைசெய்த ஒரு சமூகமே புகையிலை இல்லாத கிராமம் ஆகும்
- புகையிலை இல்லாத ஒரு கிராமத்தின் குறிக்கோள் அங்குள்ள மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது மற்றும் அனைவருக்கும் ஆரோக்கியமான சூழலை உருவாக்குதல் ஆகும்

To get free Live Classes, Materials Scan this QR Code & Download our Adda247 App

| | |
|---|---|
| தீக்கோழி பறவை  | செய்தி<br><br>பெரிய பறவைகள் தங்கள் இனவிருத்திக்காக சென்னையில் இடத்தைக் கண்டறிந்துள்ளன.<br><br>முக்கிய குறிப்புகள்:<br><br>• வண்டலூர் உயிரியல் பூங்கா என பிரபலமாக அறியப்படும் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா உலகின் மிகப்பெரிய மற்றும் அதிக எடையுள்ள பறவையான தீக்கோழிகளை வளர்ப்பதில் நாட்டிலேயே சிறந்த உயிரியல் பூங்காவாக மாறியுள்ளது.<br><br>• இயற்கையான இனவிருத்திக்கு வழிவகுக்கும் காலநிலை மற்றும் குஞ்சுகள் உயிர் பிழைப்பதற்காக உயிரியல் பூங்காவில் உள்ள அதிகாரிகள் மற்றும் பராமரிப்பாளர்களால் எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவால் தீக்கோழி குஞ்சுகள் உயிர் வாழும் சதவீதம் அதிகரித்தன. |
| குடிநீர் விநியோகத்தில் ஏற்படும் கசிவை தடுப்பதற்கு உதவும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் | செய்தி:<br><br>திருச்சியில் கசிவு இல்லாத குடிநீர் விநியோகம் செய்ய உதவும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்.<br><br>முக்கிய குறிப்புகள்:<br><br>• செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான தொழில்நுட்பம் குடிநீர் விநியோகக் குழாய்களில் ஏற்படும் கசிவைக் கண்டறிந்து அதன் மூலம் தண்ணீர் வீணாவதைக் கட்டுப்படுத்த கூட்டு திட்டம் ஒன்றை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு சமீபத்தில் மாநாகராட்சி அமைப்பிடம் தெரிவித்தது. |

| | |
|---|---|
| | • பிரான்ஸ் நிறுவனம் ஒன்று இந்தத் திட்டத்திற்கான தொழில்நுட்பத்தை உருவாக்க உள்ளது . |
| ராமக்கல் ஏரி | செய்தி:<br><br>தமிழகத்தில் ராமக்கல் ஏரி மாசடைந்து துர்நாற்றம் வீசுகிறது என்றும் ஏரியை புதுப்பித்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்<br><br>முக்கிய குறிப்புகள்<br><br>• தமிழ்நாட்டில் உள்ள தர்மபுரி மாவட்டத்தில் அருகே ராமக்கல் ஏரி அமைந்துள்ளது<br><br>• மஞ்சள் மூக்கு நாரை, சிறிய கொக்கு, கருப்பு மூக்கு நாரை, நீர்ப்பறவை போன்ற பறவைகள் ஏரியில் காணப்படுகின்றன.<br><br>• தர்மபுரி இருப்பிடவாசிகள் ராமக்கல் ஏரியில் மாசு அளவு அதிகரித்து துர்நாற்றம் வீசுவதால் அவதிக்குள்ளாகி உள்ளனர்.<br><br>• வடிகட்டுதல் அலகுகள் தொடர்பாக 15 லட்சம் ரூபாய் செலவில் புதிய வடிகட்டி ஒன்றை அமைப்பதற்கான திட்டம் ஒன்றை தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |